உ

சிவமயம்

# கனடா-காரை கலாச்சார மன்றம்

## தமிழ்மொழித் திறன், பண்ணிசைப் போட்டி - 2019

## பேச்சு

## மத்திய பிரிவு (தரம்3,4)

## செய்தித் தாள்

உலகில் நடைபெறும் நிகழ்வுகள், சம்பவங்களை விரைவாக அறிய செய்தித் தாள்கள் உதவுகின்றன.

நாம் முக்கிய செய்திகளை உடனுக்குடன் அறிய வானொலி, தொலைக்காட்சி, புதினப் பத்திரிகை என்பன உதவுகின்றன.

செய்தித் தாள்கள் எழுத்து வடிவில் செய்திகளையும், தகவல்களையும் தருகின்றன.

செய்தித் தாள்களை "செய்திப் பத்திரிகை" என்றும் கூறுகின்றனர்.

தினமும் வெளிவரும் செய்தித் தாளை தினசரி, நாளிதழ் என்றும் கூறுவர்.

வாரம் ஒருமுறை வெளிவரும் பத்திரிகைகளை வாரப் பத்திரிகை எனக் கூறுவர்.

அறிவை வளர்த்துக்கொள்ள செய்தித் தாள்கள் உதவுகின்றன.

புதிய புதிய விடயங்களை நாம் அதன்மூலம் தெரிந்துகொள்ளலாம்.

சிறுவர்களுக்கான தனிப்பகுதிகளும் பத்திரிகைகளில் உள்ளன.

சமூகத் தொடர்பை ஏற்படுத்த செய்தித் தாள்கள் உதவுகின்றன.

மாணவர்களாகிய நாம் பத்திரிகைகளை வாசித்துப் பயன்பெறுவோமாக.